Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions** **Case No. 338 of 2018**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.1**

Defence

Court

| | |
|---|---|
| Name | வேல்முருகன் |
| Father name | பரசுராமன் |
| Village | தாண்டவன்குப்பம் |
| Taluk | நெய்வேலி |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 12th day of June 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 12th day of June 2025.**

2 வது எதிரி காணொளி மூலமாக ஆஜர் செய்யப்பட்டார். 1, 4 ,5 எதிரிகள் ஆஜர். 3, 6, 7 எதிரிகள் ஆஜர் இல்லை அதற்கான மனு அனுமதிக்கப்பட்டது.

முதல்விசாரணை

நான் நெய்வேலியில் தாண்வன்குப்பத்தில் வசிக்கிறேன். நான் ஒப்பந்த தொழிலாளியாக NLC யில் அபிதா Construction யில் வேலை செய்கிறேன். எனது அப்பா

பரசுராமன் NLC யில் வேலை செய்து ஓய்வு பெற்று கேரளாவில் வேலை செய்து வந்தார். எனது தம்பி சசிகுமார் ஆஜர் எதிரிகளை வெட்டியது குறித்து அவர்களுக்குள் ஏற்கனவே பிரச்சினை இருந்து வந்தது,. எனது தம்பி சசிகுமார் மேற்படி சம்பவம் குறித்து கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தார். கடந்த 07.04.2018 அன்று அவர் பிணையில் வெளியே வந்தார். வீட்டில் தங்கி இருந்தார். 09.04.2018 அன்று வெளியே சென்று விட்டு இருசக்கர வாகனத்தில் மணிகண்டன் என்ற நபருடன் வீட்டிற்கு வந்தார். அவர் முழு போதையில் வந்தார். இரவு வீட்டுவாசலில் கட்டிலில் படுத்து தூங்கிவிட்டார். நானும் பக்கத்தில் பாய் போட்டு படுத்து இருந்தேன். எனது அம்மா வீட்டிற்குள் தூங்கி கொண்டு இருந்தார். இரவு 11.45 மணிக்கு சத்தம் கேட்டு விழித்து பார்த்த போது எனது தம்பியை எதிரி ராஜேந்திரன், மற்றும் 5 நபர்கள் வெட்டிக் கொண்டு இருந்தார்கள். நான் டார்ச் லைட் வெளிச்சத்தில் எதிரிகளை பார்த்தேன். உடன் இரவு 1.00 மணிக்கு நெய்வேலி தெர்மல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் கத்துவதை கேட்டு எனது அம்மா வீட்டிற்குள் இருந்து வெளியில் ஓடி வந்தார். அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி வந்தார்கள். வெட்டியவர்கள் இருசக்கர வாகனத்தில் சம்பவயிடத்தில் இருந்து சென்று விட்டார்கள். நான் நெய்வேலி தெர்மல் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் அதசாஆ 1 ஆகும். போலிசார் நான் புகார் கொடுத்த உடனேயே சம்பவயிடமான எனது வீட்டிற்கு வந்து வெட்டுப் பட்டுஇறந்து கிடந்த எனது தம்பியை முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமணைக்கு அழைத்து சென்றார்கள். மறுநாள் போலிசார் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமணைக்கு வந்து என்னை விசாரித்தார்கள். பிரேத பரிசோதனை முடித்து சடலத்தை எங்களிடம் ஒப்படைத்து சடங்கு முடிந்த பிறகு மறுநாள் போலிசார் காவல் நிலையத்தில் 2 சந்தேக நபர்களை பிடித்து வைத்திருப்பதாக தகவல் தெரிவித்தன் பேரில் நான் காவல் நிலையம் சென்று அவர்கள் எதிரிகள் நீலகண்டன் மற்றும் சிவா சம்பவத்தின் போது இருந்தவர்கள் என அடையாளம்

காட்டினேன். (சிவா என்பவர் தற்போது நீதிமன்றத்தில் ஆரஞ்சு நிற சட்டை அணிந்து இருந்த 5 ஆம் எதிரி ஜெயராஜ் என சாட்சி அடையாளம் காட்டினார் ) பிறகு மே மாதத்தில் சம்பவத்தில் ஈடுபட்ட 5 எதிரிகளை அடையாளம் காட்ட மத்திய சிறை சாலைக்கு அழைப்பாணை பேரில் சென்று 5 எதிரிகளை அடையாளம் காட்டினேன். போலிசார் இது குறித்து என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**:-

எனக்கு எழுத படிக்க தெரியும். காவல் நிலையத்தில் இருந்த ஒரு நபர் எனக்கு புகாரை எழுதி கொடுத்தார். நான் சொல்ல சொல்ல புகாரை எழுதினார். நான் கையொழுத்து போட்டு கொடுத்து விட்டு படித்து பார்க்கவில்லை. புகாரில் பெயர் தெரியாத நபர்கள் என எழுதி கொடுத்தேன். சம்பவத்திற்கு முன்பாக எதிரிகளை எனக்கு தெரியும். எதிரி ராஜேந்திரன் எங்கள் பக்கத்து ஊர்காரர் என்பதால் தெரியும். நான் டவுன்ஷிப்பில் வேலை பார்த்த போது மற்ற எதிரிகளை பார்த்துள்ளேன்., அந்த வகையில் எதிரிகளை தெரியும். ஆரம்பத்தில் எனது சசிகுமார் எதிரிகளும் நண்பர்களாக இருந்தார்கள் பின்பு அவர்களுக்குள் பிரச்சினை ஆகிவிட்டது. எனக்கு இந்த விவரம் நேரடியாக தெரியும். நான் புகார் கொடுத்த உடனேயே போலிசார் சம்பவயிடத்திற்கு வந்து விட்டார்கள். உடனே ஆம்புலன்ஸ் வர வழைத்து போலிசார் எனது தம்பியை மருத்துவமணைக்கு அனுப்பி வைத்தார்கள். எனது தம்பி சம்பவயிடத்தில் இறந்து விட்டார் என்று எனக்கு தெரியும். மருத்துவமணைக்கு சென்று தான் எனக்கு தெரியவந்ததா என்றால் இல்லை. தலை, கைகள் துண்டு பட்டதால் அவர் இறந்து விட்டதாக கூறுகிறேன். நாங்கள் பொட்டலம் கட்டி தான் எனது தம்பியின் பிரேததத்தை மருத்துவமணைக்கு எடுத்து சென்றோம். சம்பவ சமயத்தில் சம்பவ வீட்டிற்கு பக்கத்து தெருவில் எனது குடியிருப்பு இருந்தது. அதிகாரிகள் பார்வையிட வந்த காரணத்தினால் சம்பவ வீட்டில் நாங்கள் இருந்தோம். சம்பவ வீட்டில்

சம்பவத்தின் ஒரு வார முன்பிருந்து தங்கியிருந்தோம். நான், எனது அம்மா, எனது தங்கை, அப்பா அந்த வீட்டில் தங்கி இருந்தோம். எனது மனைவி அவரது ஊரில் இருந்தார். ஒரு வாரம் நாங்கள் இருந்த போது மின்சார இணைப்பு இல்லை. நாங்கள் குடியிருந்த வீடு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளை காலி செய்ய சொல்லி விட்டார்கள் என்றால் சரிதான். நாங்கள் காலி செய்ய வில்லை. சில பொருட்கள் மட்டும் சம்பவ வீட்டில் தான் வைத்திருந்தோம். காலிமனை தந்த பிறகு தான் காலி செய்வோம் நாங்களும் அந்த பகுதியில் இருந்த மற்றவர்களும் காலி செய்யவில்லை. எனக்கு பகல் ஷிப் என்பதால் மதியம் வீட்டிற்கு வந்து விட்டேன். நான் சம்பவ வீட்டிற்கு வந்த பிறகு தான் எனது தம்பி 7.00 மணிக்கு வந்தார். போலிசார் விசாரணையில் என் அம்மா சம்பவம் அன்று தான் இடம் எடுப்பதாக கேள்விப்பட்டு சம்பவ வீட்டிற்கு வந்ததாக நான் சொல்லவில்லை. புகார் கொடுத்த பிறகு 11.04.2018 தான் காவல் நிலையத்திற்கு நான் சென்றேன். நான் காவல் நிலையத்திற்கு சென்ற போது 2 நபர்களை போலிசார் பிடித்து வைத்திருந்தார்கள். அதன்பிறகு நான் காவல் நிலையம் செல்லவில்லை. காவல் நிலையத்தில் 2 நபர்களை மட்டும் தான் நான் பார்த்தேன். எனது தம்பி துண்டு துண்டாக வெட்டு பட்டதால் நான் மருத்துவமணைக்கு அழைத்து செல்லவில்லை. எனது ஆடைகள் மீது மட்டும் இரத்த கறைகள் இருந்தன. போலிசாரிடம் எனது ஆடைகளை ஒப்படைக்கவி'ல்லை. மறுநாள் காலை தான் எனது ஆடையில் இரத்தம் படிந்து இருந்தததை நான் பார்த்தேன். முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமணைக்கு நான் உடன் செல்லவில்லை. வேறு 2 நபர்கள் தான் சென்றார்கள். முதல் தகவல் அறிக்கை நகலை பெற்றுக் கொண்டதற்கு வாதி கையொப்பம் என்ற இடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. மறுநாள் அந்த கையொப்பத்தை காவல் நிலையத்தில் செய்தேன். முதல்விசாரணையில் நான் சொன்ன பெயர்கள் எனக்கு நேரடியாக தெரியும். எனக்கு யாரும் சொல்லவில்லை. பதட்டத்தில்

புகாரில் நான் யாருடைய பெயரும் சொல்லவில்லை. பிறகு 5 நபர்களின் பெயரை கூறினேன். அவை ராஜேந்திரன், ராஜேஷ்கண்ணா, ராஜ்குமார், நீலகண்டன் என்ற பெயர்கள் ஆகும். சம்பவ நடப்பதற்கு முன்பாகவே எனக்கு இந்த பெயர்கள் தெரியும் என்றால் பெயர் தெரியாது ஆட்களை தெரியும். எனது அம்மா, தங்கை ஆகியோர் எனது தம்பியின் பிரேததத்தின் பக்கத்தில் நான் காவல் நிலையம் சென்ற போது இருந்தார்கள். எனது தம்பியுடன் எனது அம்மாவும் மருத்துவமணைக்கு செல்லவில்லை. சுமார் 4, 5 நபர்கள் எனது தம்பியை வெட்டியதை நான் பார்த்தேன். புகாரில் 5 ற்கு மேற்பட்ட நபர்கள் சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லியுள்ளேன்., சுமார் 6, 7 நபர்கள் இருந்து இருப்பார்கள். எல்லார் வையிலும் ஆயுதங்கள் இருந்தது. கத்தி மற்றும் வீச்சி அருவாள் வைத்திருந்தார்கள் நான் பார்த்தேன். எனது தம்பிக்கு தண்ணீர் கொடுக்கும் அளவிற்கு அவரது நிலை இல்லை. நான் பதட்டமாக இருந்தேன். கை துண்டாக தொலைவில் வீழந்து விட்டது. தலை உடம்பில் தான் இருந்தது. போலிசார் எனது தம்பியின் கை துண்டாக இருந்ததை பார்த்தார்கள். ஒரு கை மட்டும் துண்டு பட்டு கிடந்தது. சம்பவம் நடக்கும் போது அங்கே இல்லை என்று சொன்னால் சரியல்ல. போலிசார் சொல்லிக் கொடுத்து எதிரிகள் சம்பவத்தில் ஈடுபட்டதாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை கேள்விப்பட்டு தான் சம்பவயிடத்திற்கு வந்தேன் என்றால் சரியல்ல. முதல்விசாரணை சொன்ன விவரங்கள் போலிசார் சொல்லி கொடுத்த விவரங்கள் என்றால் சரியல்ல. சிறையில் நான் அடையாளம் காட்டியது போலிசார் ஏற்கனவே எனக்கு அவர்களின் புகைப்படத்தை அடையாளம் காண்பித்ததை வைத்து என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கு இந்த வழக்கிற்கு எந்த சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தம்பி மீது இ,ருந்த முன் விரோதம் காரணமாக வேறு சில நபர்கள் எனது தம்பியை கொன்று விட்டார்கள் என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை

என்றால் சரியல்ல. நான் சத்தம் போட்டு கத்திய பிறகு தான் என் அம்மா வெளியே வந்தார். நான் அம்மா, எனது தம்பி, மட்டும் தான் சம்பவ வீட்டில் இருந்தோம். எனது தம்பி போதையில் இருந்ததால் சம்பவ வீட்டில் தங்கி விட்டோம். எனது தங்கை மற்றொரு வீட்டில் இருந்தார். சம்பவ சமயத்தில் கேரளாவில் எனது அப்பா இருந்தார்.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions** } **Case No. 338 of 2018**

Deposition of ....... witness for ................. { Prosecution........**P.W.2**
Defence
Court

| | |
|---|---|
| Name | தனலட்சுமி |
| Husband name | பரசுராமன் |
| Village | தாண்டவன்குப்பம் |
| Taluk | நெய்வேலி |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 12th day of June 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 12th day of June 2025.**

**2 வது எதிரி காணொளி மூலமாக ஆஜர் செய்யப்பட்டார். 1, 4 ,5 எதிரிகள் ஆஜர். 3, 6, 7 எதிரிகள் ஆஜர் இல்லை அதற்கான மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல்விசாரணை**

நான் தாண்டவன்குப்பத்தில் நெய்வேலியில் வசிக்கிறேன். அ.சா. 1 வேல்முருகன் எனது மூத்த மகன். சுமார் 7 வருடங்களுக்கு முன்பு சசிக்குமார் மற்ற நபர்களுடன் சேர்ந்து

கொண்டு குடித்து விட்டு இரவு வீட்டிற்கு வந்தார். இரவு 7.00 மணியளவில் ஒரு பையன் எனது இளைய மகனை வீட்டிற்கு கொண்டு வந்து விட்டு விட்டு சென்றார். எனது இளைய மகனை வீட்டு வாசலுக்கு நேராக படுக்க வைத்து விட்டோம். சுமார் இரவு 11.45 மணிக்கு 5, 6 நபர்கள் எனது இளைய மகனை வெட்டி விட்டு சென்றார்கள். நாங்கள் பார்த்து கத்தினோம். நானும் எனது மூத்த மகன் அ.சா. 1 வேல்முருகன் சம்பவத்தை பார்த்தோம். அன்று இரவே சுமார் 12.30 – 1.00 மணிக்கு நெய்வேலி தெர்மல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு எனது இளைய மகனை கொண்டு சென்றார்கள். எதிரிகளை எங்கள் வீட்டிற்கு போகும் வரும் வழியில் நான் பார்த்துள்ளேன். சம்பவத்தில் ஈடுபட்டவர்களை காவல் நிலையத்தில் அடையாளம் காட்ட என்னை அழைத்தார்கள் எனக்கு மனசு சரியில்லாத காரணத்தினால் நான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. போலிசார் இந்த சம்பவம் குறித்து விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:-**

போலிசார் விசாரயையில் எனது இளைய மகன் வீட்டில் வெளியே வாசலில் படுத்து விட்டதாகவும் நான் வீட்டிற்கு சென்று படுத்து விட்டேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் வெளியே வந்து பார்த்த போது எனது மகனை வெட்டிக் கொண்டு இருந்தார்கள். நானும் எனது மூத்த மகன் மட்டும் அங்கே இருந்தோம். எனது மூத்த மகன் வேல்முருகன் வெளியே படுத்துக் கொண்டு இருந்தார். வேல்முருகன் வீட்டிற்கு மாலை 6.30 மணிக்கு வந்து விட்டார். எனது இளையமகன் சசிக்குமார் என் பெரிய மகன் வீட்டிற்கு வந்த போது வீட்டில் இருந்தார். அவனை பார்த்து விட்டு எனது பெரிய மகன் தொலைவில் போய்விட்டார். சத்தம் கேட்டு தான் நான் வெளியில் வந்து பார்த்தேன் என்றால் சரிதான். எனது இளையமகனை காப்பாற்ற நான் மருத்துவமனைக்கு உடனே அழைத்து செல்ல வில்லை அவரது உடலில் உயிர் இல்லாத காரணத்தினால் அழைத்து செல்லவில்லை.

எனது மகனின் உடலில் ஏற்பட்டிருந்த காயங்களை வைத்து அவர் இறந்து விட்டதாக நான் கூறுகிறேன். போலிசார் நடுஇரவு 1.00 மணி போல் வந்தார்கள். போலிசார் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமணைக்கு என் மகனின் பிரேதத்தை எடுத்துக் கொண்டு சென்றார்கள். நான் மருத்துவமணைக்கு உடன் செல்லவில்லை. எனது மகன் அ.சா. 1 வேல்முருகன் மருத்துவமணைக்கு சென்றார். எங்கள் ஆடைகள் மீது இரத்த கறைகள் படவில்லை. போலிசார் வரும் வரை என் இளையமகன் உடல் அங்கே தான் இருந்தது. என் மகனை வெட்டுவதற்கு முன்பாக எதிரிகளை ஒரு முறை பார்த்துள்ளேன். எதிரிகள் எனது இளையமகனின் நண்பர்கள் என்றால் அப்படி தான் சொல்லுகிறார்கள். எனது இளையமகன் சசிகுமார் மீது எத்தனை வழக்குகள் உள்ளது என்று எனக்கு தெரியாது. எந்த வழக்கில் என் மகன் ஜாமீனில் வெளியே வந்தார் என்று எனக்கு தெரியாது. சம்பவம் நடப்பதற்கு முன்பாக இளையமகன் சிறையில் இருந்தார் என்றால் சரிதான். எனது மூத்த மகனுக்கு சம்பவத்திற்கு முன்பாக திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். சம்பவத்தின் போது எனது மூத்த மகன் என்னுடன் இருந்தார். சம்பவத்தின் போது எனது மூத்த மகன் தனிக்குடித்தனம் தாண்டவன்குப்பத்தில் வேறு இடத்தில் இருந்தார். சம்பவத்தின் போது எனது மருமகள் அவரது சொந்த ஊரான சேலத்தில் குழந்தைகளுடன் இருந்தார். சம்பவத்தின் போது நான் தனியாக இருந்ததாலும் எனது இளையமகன் குடித்து விட்டு இருந்ததாலும் எனது பெரிய மகனை அங்கேயே இருக்க செய்தேன். எனது மூத்த மகனுக்கு நான் சொல்லிவிட்டேன். அதன் பேரில் அவர் வந்தார். போலிசார் விசாரணையில் அதிகாரிகள் தாண்டவன்குப்பம் கிராமத்தில் குடியிருந்தவர்களை பார்வையிட்டு மாற்று குடியிருப்பு வழங்குவதாக கேள்விப்பட்டு நானும் எனது பெரிய மகனும் சம்பவ வீட்டிற்கு வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவ வீட்டில் சம்பவ சமயத்தில் குடியிருப்பு இல்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நாங்கள் மற்றும் அந்த ஊரில்

இருந்தவர்கள் காலி செய்து சென்று விட்டோம் என்றால் சரிதான். அங்கே மின்சாரம் துண்டிக்கப்பட்டு இருந்தது என்றால் சரிதான். அக்கம் பக்கத்தில் இருந்தவர்களுக்கு மாற்று இடம் கொடுத்து அவர்கள் சென்று விட்டார்கள் என்றால் சரிதான். சம்பவம் சமயத்தில் நானும் எனது மூத்த மகன் அ.,சா. 1 வேல்முருகன் சம்பவயிடத்தில் இல்லை என்றாலும் போலிசார் கொடுத்த தகவலின் பேரில் தான் மறுநாள் சம்பவயிடத்திற்கு வந்தோம் என்று சொன்னால் சரியல்ல. போலிசார் கேட்டுக் கொண்டதன் பேரில் நான் சம்பவத்தை பார்த்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*